**செப்டம்பர் – 16**

# TNPSC துளிகள்

- பாலில் இருந்து தயாரிக்கப்படும் சுவையான மதுரை ஜிகர்தண்டாவிற்கு புவிசார் குறியீடு பெறுவதற்காக சென்னையில் உள்ள புவிசார் குறியீட்டுப் பதிவேட்டு அலுவலகத்தில் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- காலை மற்றும் மாலை நேரங்களில் 25 அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்காக சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகமானது (MTC) சென்னையில் 25 பேருந்துகளை அறிமுகப் படுத்தி உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதியன்று ரோம் நகரில் நடைபெற்ற நான்காவது உச்சி மாநாட்டில் அறிவிக்கப்பட்ட ஏலத்தை இந்தியா வென்றதையடுத்து, 2027 ஆம் ஆண்டில் சென்னையில் ஐந்தாவது கடலோரக் காவல்படை உலகளாவிய உச்சி மாநாட்டை நடத்த உள்ளது.
- 1,800க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் விளையாட்டு, தொழில்முனைவோர் மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் மூலம் உள்ளடக்கிய தன்மையைக் கொண்டாடியதுடன் பர்பிள் ஃபெஸ்ட் 2025 நொய்டாவின் அமிட்டி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.
- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) முதல் பிராந்திய அலுவலகம் பீகாரின் பாட்னாவில் திறக்கப் பட்டது.
- டெல்லி-மீரட் பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பு (RRTS) வழித்தடத்தில் இயங்கும் போது மணிக்கு 160 கிலோமீட்டர் வேகத்தை எட்டியதன் மூலம் நமோ பாரத் இந்தியாவின் அதிவேக இரயிலாக மாறியுள்ளது.
- துபாய் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் பின் முகமது, துபாயில் அமைக்கப் பட்டு உள்ள அகமதாபாத்தின் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தின் முதல் சர்வதேச வளாகத்தைத் திறந்து வைத்தார்.
- உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட இந்திய ராணுவ பாய்மரக் கப்பலான திரிவேணியில் உலகின் முதலாவது முப்படையினரால் இயக்கப் படும் 'சமுத்திரப் பிரதக்சினா' பயணத்தினை மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் மேம்பாட்டிற்கு அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்கப் பங்களிப்பிற்காக முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு மரணத்திற்குப் பின்னதாக பொருளாதாரத்திற்கான P. V. நரசிம்ம ராவ் நினைவு விருது வழங்கப்பட்டது.
- புதைபடிவ எரிபொருள் சாராத மின்சார உற்பத்தித் திறனில் இந்தியா 250 ஜிகாவாட் அளவினை எட்டியுள்ளது.
    - 2030 ஆம் ஆண்டிற்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை 500 ஜிகாவாட் ஆக உயர்த்துவதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## முந்திரி வாரியம் – தமிழ்நாடு


- கடலூரில் தலைமையகத்தைக் கொண்ட முந்திரி வாரியத்தை தமிழ்நாடு அரசு

அமைத்துள்ளது.

- உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்காகவும், முந்திரி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காகவும் இந்த வாரியம் அமைக்கப் பட்டுள்ளது.
- முந்திரி உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே ஐந்தாவது இடத்தில் உள்ளது மற்றும் முந்திரி ஏற்றுமதியில் இரண்டாவது பெரிய மாநிலமாகவும் உள்ளது.
- மாநிலத்தில் 2.09 லட்சம் ஏக்கரில் பயிரிடப்படுகின்ற முந்திரி பருப்பு ஆனது, இந்த ஆண்டு 43,460 மெட்ரிக் டன் அளவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- 2025–2026 ஆம் ஆண்டின் வேளாண் நிதி ஒதுக்கீட்டில் அறிவிக்கப்பட்டபடி 10 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் இந்த வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது.
- வேளாண் அமைச்சர் தலைமையில் செயல்படுகின்ற இந்த வாரியமானது, முக்கிய வேளாண்மை மற்றும் ஏற்றுமதி அமைப்புகளைச் சேர்ந்த 12 உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இருக்கும்.




## SHORE திட்டம்




- தமிழ்நாடு கடலோர மீள் திறன் திட்டத்திற்கு உலக வங்கி 1,675 கோடி ரூபாயை அங்கீகரித்துள்ளது.

- இந்தத் திட்டத்திற்கு கடற்கரை மீள் திறன் மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல் (SHORE) என்று பெயரிடப்பட்டுள்ளது.
- மொத்தச் செலவில், உலக வங்கி 1,172.5 கோடி ரூபாயையும், மாநில அரசு 502.5 கோடி ரூபாயையும் பங்களிக்கும்.
- இந்தத் திட்டமானது சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள், மணல் திட்டுகள் மற்றும் கடல் புற்கள் உள்ளிட்ட 30,000 ஹெக்டேர் அளவிலான கடல் சார் நிலப்பரப்பைப் புத்துயிர் பெறச் செய்யும்.

# தேசியச் செய்திகள்


## பட்டாசு தடை குறித்த உச்ச நீதிமன்றம்




- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 03 ஆம் தேதியன்று டெல்லி மற்றும் தேசியத் தலைநகரப் பிராந்தியத்தில் (NCR) பட்டாசுகளின் உற்பத்தி, விற்பனை, சேமிப்பு மற்றும் பயன்பாட்டின் மீது உச்ச நீதிமன்றம் முழுமையான தடையை விதித்தது.
- பட்டாசுகளை தடை செய்யப்பட்ட காலங்களில் சேமித்துப் பயன்படுத்தலாம் என்பதால் பகுதி அளவிலான கட்டுப்பாடுகள் பயனற்றதாக இருந்ததால் இந்தத் தடை விதிக்கப்பட்டது.
- இந்தத் தடையை குறிப்பிட்ட பிராந்தியங்களில் மட்டும் அமல்படுத்தும் நடைமுறைகள் குறித்து உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியதுடன், காற்று மாசுபாட்டிற்கு இந்தியா முழுவதிற்குமான ஒரு கொள்கைத் தேவை என்றும் சுட்டிக் காட்டியது.
- டெல்லிக்கு வெளியே உள்ள நகரங்களில், அமிர்தசரஸ் போன்ற நகரங்களில் காற்று மாசுபாட்டின் அளவானது சில நேரங்களில், குளிர்காலப் பண்டிகைகளின் போது டெல்லியை விட அதிகமாக உள்ளது என்பதை நீதிமன்றம் எடுத்துக்காட்டியது.
- காற்று மாசுபாட்டை நிவர்த்தி செய்வதற்காக ஒரே மாதிரியான தேசிய நடவடிக்கை அவசியம் என்று நீதிமன்றம் வலியுறுத்தியது, மேலும் பட்டாசுத் தொழில் துறையில் உள்ள தொழிலாளர்கள் மீதான பொருளாதாரத் தாக்கத்தையும் குறிப்பிட்டது.
- இந்த வழக்கானது இரண்டு வாரங்களில் மேற்கொண்டு விசாரணைக்கு பட்டியலிடப் பட்டுள்ளது என்ற நிலையில், மேலும் காற்றுத் தர மேலாண்மை ஆணையத்திடம்

(CAQM) ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மாவட்ட நீதிபதி பதவிகளுக்கான ஒதுக்கீடு




- உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதி முதல் இந்த வழக்கை விசாரிக்க உள்ளது.
- இந்த வழக்கானது மாவட்ட நீதிபதிகளை நியமிப்பதை நிர்வகிக்கின்ற அரசியலமைப்பின் 233வது சரத்தினைப் பற்றியது.
- 233(2) வது சரத்து குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் பணியில் இருந்தும் நீதிச் சேவை ஆற்றாத வழக்கறிஞர்களை மட்டுமே மாவட்ட நீதிபதிகளாக நியமிக்க அனுமதிக்கிறது.
- முன்பு வழக்கறிஞர் மன்றப் பணி அனுபவம் பெற்ற ஒரு நீதித்துறை அதிகாரி, வழக்கறிஞர் மன்ற ஒதுக்கீட்டின் கீழ் தகுதி பெறுகிறாரா என்பதை நீதிமன்றம் ஆராயும்.
- இது துணை நீதித்துறைக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான 234 என்ற சரத்திலிருந்து வேறுபட்டது.
- ஏழு ஆண்டுகள் வழக்கறிஞர் பணி அனுபவம் கொண்ட நீதித்துறை அதிகாரிகள், வழக்கறிஞர் மன்ற ஒதுக்கீட்டின் கீழ் தகுதி பெறுகிறார்களா என்பது தான் கேள்விக்கு உள்ளானதாகும்.
- மாவட்ட நீதிபதி ஒருவர் பணியாற்றி வருவதால், அவரது நியமனத்தை ரத்து செய்த கேரள உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிலிருந்து இந்த வழக்கு எழுந்தது.
- 2021 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்தது.
- இந்த விவகாரமானது அதிகாரப்பூர்வமான விளக்கத்திற்காக ஒரு ஈராய அமர்வினால் அரசியலமைப்பு அமர்விற்குப் பரிந்துரைக்கப்பட்டது.

## குற்றவியல் அவதூறு வழக்கு - கங்கனா ரனாவத்

- மறு பகிர்வு தொடர்பான குற்றவியல் அவதூறு புகாரை ரத்து செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் கங்கனா ரனாவத் தாக்கல் செய்த மனுவை திரும்பப் பெற்றார்.

- அவரின் ட்வீட் பதிவு நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என்பதைக் காட்டத் தவறி விட்டார் என்று கூறி, பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் முன்னதாக அவரது மனுவை தள்ளுபடி செய்திருந்தது.
- இந்தியாவில், அவதூறு வழக்கானது இந்திய தண்டனைச் சட்டத்தின் 499 மற்றும் 500 ஆகிய பிரிவுகளின் கீழ் ஒரு குற்றவியல் குற்றமாகும் என்பதோடு கருத்துகளுடனான மறு பகிர்வு செய்வது அதற்கான பொறுப்பை ஏற்கக் கூடியதாக அமையும்.





## விரைவான குடியேற்றத் திட்ட விரிவாக்கம்




- மத்திய உள்துறை அமைச்சகமானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதியன்று நம்பகமான பயணிகளின் விரைவான குடியேற்றத்திற்கான (உள் நுழைவு வசதி) திட்டத்தை (FTI-TTP) மேலும் ஐந்து விமான நிலையங்களில் தொடங்கியது.
- புதிதாக சேர்க்கப்பட்ட விமான நிலையங்கள் லக்னோ, திருவனந்தபுரம், திருச்சிராப் பள்ளி, கோழிக்கோடு மற்றும் அமிர்தசரஸ் ஆகியனவாகும்.
- இந்தத் திட்டமானது முன்னதாக சரிபார்க்கப்பட்ட இந்தியக் குடிமக்கள் மற்றும் வெளி நாடு வாழ் இந்திய (OCI) அட்டைதாரர்களுக்கு 30 வினாடி நேரத்திலான குடியேற்ற அனுமதியை வழங்குகிறது.
- FTI-TTP ஆனது முதன்முதலில் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் டெல்லி விமான நிலையத்தில் தொடங்கப்பட்டதோடு பின்னர் மும்பை, சென்னை மற்றும் பெங்களூரு உட்பட ஏழு முக்கிய விமான நிலையங்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டது.

- இந்தத் திட்டத்தினை நவி மும்பை மற்றும் ஜேவாரில் நிறுவப்பட உள்ள விமான நிலையங்கள் உட்பட 21 விமான நிலையங்களுக்கு விரிவுபடுத்த அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.
- தற்போது இலவசமாக செயல்படுத்தப்படும் FTI-TTP ஆனது பயணிகளின் வசதி மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆகிய இரண்டையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## AIDIS மற்றும் SAS



### About All-India Debt And Investment Survey (AIDIS)

**Conducting agency:** The **National Statistics Office (NSO)**, under MoSPI, conducts AIDIS as part of its large-scale household survey system.

**Historical background:**
- AIDIS traces its origin to the **All India Rural Credit Survey (1951–52).**
- It was expanded in **1961–62** to cover both **debt** and **investment.**
- Since then, it has been conducted roughly once every decade, most recently in the 77th Round (2019) at the request of the Reserve Bank of India.

**Purpose and coverage:**
- The survey provides **critical data on household indebtedness and asset ownership** in both rural and urban areas.
- These data feed into **national accounts** and help assess **inequality** in **asset distribution** and **understand credit markets.**

### About Situation Assessment Survey (SAS) Of Agricultural Households

**Conducting agency:** The NSO, under MoSPI, conducts the SAS to assess farming livelihoods.

- புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசியப் புள்ளி விவர அலுவலகம் ஆனது 2026 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2027 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை வேளாண் குடும்பங்களின் அகில இந்தியக் கடன் மற்றும் முதலீட்டுக் கணக்கெடுப்பு (AIDIS) மற்றும் சூழ்நிலை மதிப்பீட்டுக் கணக்கெடுப்பு (SAS) ஆகியவற்றை நடத்த உள்ளது.
- AIDIS என்பது 1951-52 ஆம் ஆண்டில் அகில இந்திய கிராமப்புறக் கடன் கணக்கெடுப்பாக முதன்முதலில் நடத்தப்பட்ட ஒரு முக்கிய குடும்ப/வீட்டு நிதிக் கணக்கெடுப்பாகும்.
- இது 1961-62 ஆம் ஆண்டில் கடன் மற்றும் முதலீடு ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டது.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டுக் கடன் மற்றும் சொத்து உரிமை பற்றியத் தரவுகளை வழங்குகிறது மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி, புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் மற்றும் பிற நிறுவனங்களின் கொள்கைகளை தெரிவிக்கிறது.
- 2003 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட வேளாண் குடும்பங்களின் சூழ்நிலை மதிப்பீட்டு ஆய்வு (SAS) ஆனது நாடு முழுவதும் வேளாண் சமூகங்களின் பொருளாதார நிலைமைகளை மதிப்பிடுவதற்காக 2013 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் விரிவுபடுத்தப் பட்டது.

- இது வீட்டு வருமானம், செலவினம், கடன், நில உரிமை, பயிர் உற்பத்தி, வேளாண் நடைமுறைகள் மற்றும் அரசாங்கத் திட்டங்கள் மற்றும் பயிர்க் காப்பீட்டிற்கான அணுகலை உள்ளடக்கியது.

## எல்லைப் பிரிவு ஊர்க்காவல் படை




- சீன எல்லையில் நிலை நிறுத்தப்பட்டுள்ள எல்லைப் பிரிவின் ஊர்க் காவல் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
- அவசர காலங்களில் எல்லைப் பிரிவின் ஊர்க் காவல் படையினர் இராணுவம் மற்றும் பிற எல்லைப் படைகளுக்கு துணைப் படைகளாகச் செயல்படுகின்றனர்.
- தற்போது, 2,279 காவலர்கள் இராஜஸ்தானில் மட்டுமே செயலில் உள்ளனர்.
- இந்த நடவடிக்கையானது 3,488 கிலோமீட்டர் தூர சீன எல்லையில் இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படையை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு முதல், கிழக்கு லடாக்கில் 50,000க்கும் மேற்பட்ட இராணுவம் மற்றும் ITBP பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான சான்று

- ஜெசெரோ பள்ளத்திலிருந்து சபையர் கேன்யன் எனப்படும் செவ்வாய்க் கிரகத்தின் பாறை மாதிரியை அறிவியலாளர்கள் ஆய்வு செய்தனர்.
- இதில் பூமியில் நுண்ணுயிர் செயல்பாட்டுடன் தொடர்புடைய தாதுக்களான விவியானைட் மற்றும் கிரெய்கைட் ஆகியவை உள்ளன.
- இந்த தாதுக்கள் ரெடாக்ஸ் எதிர்வினைகளால் (ஆக்சிசனேற்றம் மற்றும் ஒடுக்க வினைகள்) உருவாக்கப்பட்ட "leopard spots" எனப்படும் புள்ளிகள் வடிவத்தில் தோன்றுகின்றன.
- ரெடாக்ஸ் பிறழ்வுகள் நுண்ணுயிரிகளால் அல்லது சில சூழல்களின் கீழ் உயிரியல் சாராத செயல்முறைகளால் ஏற்படலாம்.
- உயிரியல் தோற்றம் சாத்தியமற்றுக் காணப்படுவதால் வெப்பம் அல்லது அமிலத்

தன்மையின் எந்த அறிகுறிகளும் இந்தத் தாதுக்களுக்கு இல்லை.

- இந்தப் பாறை மாதிரி ஒரு சாத்தியமான உயிரியல் அடையாளமாகும் மற்றும் செவ்வாய்க் கிரகத்தில் பண்டைய காலத்தில் நுண்ணுயிர்கள் காணப்பட்டதைக் குறிக்கின்றன.




## தாவர அடிப்படையிலான காயச் சுற்றுத் துணி




- கேரளாவின் ஜவஹர்லால் நேரு வெப்பமண்டல தாவரவியல் பூங்கா மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (JNTBGRI) அறிவியலாளர்கள், சிவப்பு முறிவொட்டி செடியைப் பயன்படுத்தி ஒரு காயச் சுற்றுத் துணியை உருவாக்கினர்.
- இந்தத் தாவரம், உள்ளூரில் முறிகூட்டிப் பச்சை (ஸ்ட்ரோபிலாந்தஸ் ஆல்டர்னேட்டா) என்று அழைக்கப்படுகிறது.
- இது அகந்தேசி குடும்பத்தைச் சேர்ந்தது மற்றும் இந்தியா உள்ளிட்ட வெப்பமண்டலப் பகுதிகளில் வளர்கிறது.
- ஆராய்ச்சியாளர்கள் சிவப்பு முறிவொட்டி செடியிலிருந்து உயிரியியக்கச் சேர்மமமான ஆக்டியோசைடை பிரித்து, அதை முதல் முறையாக தாவரத்தின் பாரம்பரிய காயம் குணப்படுத்தும் பயன்பாட்டுடன் ஒருங்கிணைத்தனர்.

- காயச் சுற்றுத் துணி மின்னியல் ரீதியாக நெய்யப்பட்ட (எலக்ட்ரோ-ஸ்பன்) நுண் இழைகளைப் பயன்படுத்துகிறது மற்றும் ஆக்டியோசைடு (0.2%), நியோமைசின் சல்பேட் மற்றும் FDA அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட மக்கும் பலபடி சேர்மங்களைக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆஸ்பெர்கிலஸ் இனங்கள்




- புனேவில் உள்ள MACS-அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள மண் மாதிரிகளிலிருந்து ஆஸ்பெர்கிலஸ் (பூஞ்சைக் காளான்) பிரிவின் நிக்ரியைச் சேர்ந்த (பொதுவாக கருப்பு ஆஸ்பெர்கிலஸ் என்று அழைக்கப்படுகிறது), ஆஸ்பெர்கிலஸ் தாகேபல்காரி மற்றும் ஆஸ்பெர்கிலஸ் பாட்ரிசியாவில்ட்ஷிரே ஆகிய இரண்டு புதிய இனங்களை அடையாளம் கண்டுள்ளனர்.
- அவர்கள் இந்தியாவில் ஆஸ்பெர்கிலஸ் அக்குலேட்டினஸ் மற்றும் ஆஸ்பெர்கிலஸ் ப்ரூனியோவியோலேசியஸின் முதல் புவியியல் பதிவுகளையும் கண்டறிந்து பின்னர் தெரிவித்தனர்.
- ஆஸ்பெர்கிலஸ் இனத்தில், முக்கியச் சுற்றுச்சூழல் இடங்களில் பரவலாகக் காணப் படும் இழை நார் பூஞ்சைகள் அடங்கும்.

# மாநிலச் செய்திகள்

## நகர்ப்புற வளங்காப்பிற்கான ராம்சர் ஈரநில நகர அங்கீகாரம்

- 2025 ஆம் ஆண்டில், ராம்சர் உடன்படிக்கையின் கீழ் உதய்ப்பூருக்கு ஈரநில நகர அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- MoEFCC நடத்திய சுவச் வாயு சர்வேக்சன் விருதுகள் மற்றும் ஈர நில நகர அங்கீகார விழாவின் போது இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

- நகர்ப்புறத் திட்டமிடலில் ஈரநிலப் பாதுகாப்பை ஒருங்கிணைத்ததற்கும், ஏரிப் பாதுகாப்பில் சமூகங்களை ஈடுபடுத்துவதற்கும் உதய்ப்பூர் இந்த அங்கீகாரத்தைப் பெற்றது.
- ஈரநில வளங்காப்பு, பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்வாதாரங்களில் சிறந்த முன்னெடுப்புகளைக் கொண்ட நகரங்களை ராம்சர் ஈரநில நகர அங்கீகாரம் கௌரவிக்கிறது.
- 'ஏரிகளின் நகரம்' என்று அழைக்கப்படும் உதய்ப்பூர், நிலையான ஈரநில மேலாண்மைக்காக அங்கீகரிக்கப்பட்ட நகரங்களின் உலகளாவியப் பட்டியலில் தற்போது இணைகிறது.




# முக்கிய தினங்கள்

## உலக தற்கொலை தடுப்பு தினம் 2025 - செப்டம்பர் 10




- இது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், இரக்கத்தை வளர்ப்பதற்காகவும், தற்கொலைகளைத் தடுப்பதில் கூட்டு நடவடிக்கையை ஊக்குவிப்பதற்கும் உலக அளவில் அனுசரிக்கப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் 208,000 உயிர்கள் இழக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், நமது தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் தற்கொலை ஒரு முக்கியப் பிரச்சினையாக உள்ளது.
- இந்தியாவின் தற்கொலை விகிதங்கள் ஆனது உலகச் சராசரியை விட அதிகமாக உள்ளன.

- உலக தற்கொலை தடுப்பு தினத்திற்கான (2024–2026) மூன்று ஆண்டுகளுக்கு பயன்படுத்தப்படும் கருத்துருவானது, "Changing the Narrative on Suicide" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## ப்ளீஸ்டோசீன் கால ஓநாய் கண்டுபிடிப்பு – ரஷ்யா

- சைபீரியப் பகுதியில் காணப்படும் நிரந்தர உறைபனியில் தோல், ரோமம் மற்றும் உறுப்புகள் உட்பட நன்கு பாதுகாக்கப்பட்ட 44,000 ஆண்டுகள் பழமையான ஓநாய் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- 2021 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மாதிரியானது, ப்ளீஸ்டோசீன் சகாப்தத்தின் பிற்பகுதியைச் சேர்ந்தது.
- நிரந்தர உறைபனியானது, ஓநாய் உடலை பனியில் மூழ்கச் செய்து ஆக்ஸிஜன் மற்றும் ஈரப்பதத்தில் அது வெளிப்படுவதைக் குறைத்ததன் மூலம் அதன் உடலின் சிதைவைத் தடுத்தது.





## பிலிப்பைன்ஸ் புகாட் தீவு

- புகாட் என்பது புலாக்கன் மாகாணத்தில் உள்ள ஹகோனாயின் ஒரு பகுதியான மணிலா விரிகுடாவில் 7 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட ஒரு தீவாகும்.
- இந்தத் தீவு அங்கட்-பம்பங்கா நதி டெல்டாவின் முகத்துவாரத்தில் தாழ்வான பகுதியில் அமைந்துள்ளது.
- நிலத்தடி நீர் அதிகமாகப் பயன்படுத்தப் படுவதால் ஆண்டிற்கு சுமார் 11 சென்டிமீட்டர் நிலம் தாழ்ந்து வருவதால் புகாட் பகுதி நீரில் மூழ்கி வருகிறது.
- பிலிப்பைன்ஸில் கடல் மட்டம் ஆண்டிற்கு 13 மில்லிமீட்டர் வரை உயர்ந்து வருகிறது, இது உலக சராசரியை விட மூன்று மடங்கு அதிகமாகும்.
- இங்கு மீன் குளங்களுக்காக சதுப்புநிலக் காடுகள் அழிக்கப் பட்டன என்ற நிலையில் இது அந்தத் தீவின் இயற்கை கடலோரப் பாதுகாப்புக் கவசத்தின் பெரும் பரவலைக்

குறைத்தது.

❖ புகாட் அடிக்கடி வெள்ளம், சூறாவளி மற்றும் புயல் பாதிப்புகளை எதிர்கொள்கிறது என்ற நிலையில் இது இடப்பெயர்ச்சி அபாயத்தை அதிகரிக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★